[27th November 1970

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நமது கழக அரசின் கொள்கையை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அவர் எந்தெந்தக் காரணத்தின் அடிப்படையில் மத்திய அரசுக்கு நம் கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டார்களோ, அந்தக் காரணங்களின் அடிப்படையில் தான் நம் அரசிடமிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியனுப்பப்பட்டது. அது மட்டுமன்றி, நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 10-4-1970 அன்று நடைபெற்ற தென் மண்டல தொழிலாளர்கள் நல அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு நம்முடைய கொள்கையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். இந்தக் கருத்தும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப் படையில், மத்திய அரசிலிருந்து தக்க பதில் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னல் இருந்த அரசு இதுபோன்று மத்திய அரசு தொழில் நிறுவனங்களில் ஏற்படும் தொழில் தகராறுகளையும் மாநில அரசே தீர்க்கும் வகையில் அதிகாரம் வேண்டும் என்று கேட்டு கடிதம் ஏதேனும் எழுதியிருக்கி றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் அப்படி ஏதுமில்லை என்றே கருதுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட தென் மண்டல தொழிலாளர் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசினார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி மத்திய அரசாங் கத்தின் அபிப்பிராயம் அப்போதே தெரிவிக்கப்பட்டதா அல்லது இப் போதாவது அதுபற்றி ஏதாவது தெரிந்ததா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அந்தக் கூட்டத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் பேசிய கருத்துக்களில் சிலவற்றை வைத்துத் தான் இங்கேயிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதைத் தவிர வேறு தனியாகக் கடிதம் எழுதவில்லை. அவர் பேசிய கருத்துக்களை வைத்துத்தான் எழுதப்பட்டது. இந்தக் கருத்தையும் மத்திய அரசு நினைவில் கொண்டு பதில் அனுப்பும் என்று எதிர்பார்க் கிறோம்.

Secondary Grade Teachers

*5. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that orders for the upgrading of certain Secondary Grade Teachers working in Higher Grade posts in Thottiam Panchayat Union, Tiruchirapalli District were later withdrawn in 1969;

(*b*) the number of teachers affected by the order ; and

(*c*) the reasons for such cancellation of the order ?

இடைநிலைத் தர ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தில் துவக்கத்தர பதவிகளில் பணியாற்றும் இடைநிலைத்தர ஆசிரியர்களின் பதவித் தரத்தை உயர்த்துவது குறித்த ஆணைகள் பின்னர் 1969-ம் ஆண்டில் திரும்பப் பெறப்பட்டனவா ?

(இ) இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) அவ்வாறு ரத்து ஆணை வெளியிட்டதற்கான காரணங்கள் யாவை ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : (*a*) Yes, Sir.

(*b*) Four.

(*c*) The Commissioner who gave the promotions of his own accord had no powers to do so. He had ordered these promotions without the approval of the Appointments Committee. The approval of the Appointments Committee is necessary before the Commissioner orders the promotions. So the Director of Rural Development ordered the stay of the proceedings of the Commissioner and instructed him to place the matter before the Appointments Committee.

THIRU G. SWAMINATHAN : May I know why this Commissioner without any powers has passed these orders ?

THE HON. THIRU P.U. SHANMUGHAM : I do not know. He did it of his own accord. He has been placed under suspension.

THIRU M. RAJAH IYER : May I know whether it makes any difference in the total number of teachers upgraded ? Since this is only a technical irregularity, I want to know whether it was set right later.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : It is purely a technical irregularity. Six teachers were allotted to that Union. They have been selected.

Mineral Sand

*6. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the quantum of the ore mixed sand exported to foreign countries during the last five years from the Coastal area of Manavalakurichi and Colachel of Kanyakumari District ;

(*b*) the amount of foreign exchange earned annually from this export ; and

(*c*) the proportion of the minerals found mixed in the sand so exported ?